**நியூ கூலிங்கன்**
இன்றும்
10-3-72 வரை
தினசரி மாலை 4-30
OPERATION
WHITE SHARK

தினசரி 6-30, இரவு 10-00
சனி ஞாயிறு 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
**கல்யாணப் பரிசு**

**யாழ். தியேட்டர்**
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 மட்டும்
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-விஜயா
**அக்கா தங்கை**

தினசரி பி.ப 4-00, 9-30
GIRL ON A
MOTOR CYCLE

**வெஸ்லி சினிமா**
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்- வாணிமதி
**பூவும் பொட்டும்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-வரலக்ஷ்மி
நடித்த
**ஹரிச்சந்திரா**

**நாகபூஷ்ஸ் சினிமா**
அன்னை
தினசரி 4-30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30
JIGSAW

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
**கப்டன் ரஞ்சன்**

**மனோகரா** எம். ஜி. ஆர். —பானுமதி
(யாழ்ப்பாணம்) நடித்த
தினசரி 2-30 6-30, 10-00 சனி, ஞாயிறு 10-30
**மலைக்கள்ளன்**

**REGAL** (Jaffna)
Daily 10-30 a. m. 3-45, 7-00 and 9-45 p.m.
Gregory Peck and Omar Sharif
in
MACKENN'S GOLD
(Super Panavision and Technicolor)

**ராணி** சிவாஜி — ஜெயலலிதா
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - நாகேஷ்
தினசரி 2-30, 6-30 நடித்த
**சவாலேசமாளி**
தினசரி காலை 10-30 இரவு 10-00
**மாட்டுக்கார வேலன்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு காலை10-00 மணிக்கு
எம். ஜி. ஆர். ★ மஞ்சுளா
பத்மினி - அசோகன் - மனோகர்
சுந்தரராஜன் - தேங்காய் சீனிவாசன் - சோ
நடித்த
சத்யா மூவிஸாரின் ஈஸ்ட்மென் வர்ணச்சித்திரம்
**ரிக்‌ஷாக்காரன்**

**லிடோ** (யாழ்ப்பாணம்)
காலை 10-00 மணிக்கு
எம். ஜி. ஆர்—மஞ்சுளா நடித்த
**ரிக்‌ஷாக்காரன்**
மாலை 3-30, 6-30 மணிக்கு
RIFIFI IN AMSTERDAM
(Cinemascope and Color)
இரவு 9-30 மணிக்கு
★ சிவாஜி — ★ கே.ஆர். விஜயா
**ஊட்டி வரை உறவு**


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு
நல்ல பழக்க வழக்கமுள்ள வளர்ந்த அல்சேஷன் ஆண் பெண் நாய்கள் விற்பனைக்கு உண்டு. இனவிருத்திக்காக சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட அல்சேஷன் ஆண் நாய்களும் எம்மிடம் உண்டு. க. நடேசன் 15, மலர் மகள் வீதி, அரியாலை. 4058

புதுவருட ஆயர்வாடி ராசிப்புத்தகம், படித்தவர் தேவையடையார், செய்யக்கூடியது செய்யக்கூடாதது, விளக்கமாகத் தந்திருக்கிறது. உங்களின் இராசிப்புத்தகம் வாங்கிவிட்டீர்களா ரூபா 1/50. ஆயர்வாடி சோதிடநிலையம், தெல்லிப்பழை. 4103

தராதரப்பத்திர மத்திய ஆசிரியர் விண்ணப்பப்படிவங்கள் ஒன்றுரூபா 1/-வீதம் இங்கே கிடைக்கும். யூனிட்டெட் இன்ஸ்டியூற், நெல்லியடி கரவெட்டி 4115

### தேவை
யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின்சார வசதியுடன் கூடிய தனிப்பட்ட வீடு. பின்வளவு வசதியுடன் தேவை. தொடர்பு கொள்ளவும். ஓ. அண்ணாமலை, 385, காங்கேசன் துறை வீதி, யாழ்நகர். 4119

வான் விற்பனையாளர் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் திறமை அத்தாட்சியுடன் தேரில் விண்ணப்பிக்கவும்: தேவன் இண்டஸ்றீஸ், 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 4137

### கல்வி
J. S. C. பரீட்சைக்கான (1) புதிய கணிதம். (2) பொதுவிஞ்ஞானம், (3) ஆங்கிலம். பிற்பகல் 4 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை. இரவுண் போதனா நிலையம். 16, கண்டி வீதி கண்டிக்குழி, யாழ்ப்பாணம். 4079

விசேட, சிங்கள, ஆங்கில வகுப்புக்கள். மாலை 4 மணி தொடக்கம் 8 மணிவரை கட்டணம் மாதம் ரூ. 15-00 இரவுண் போதனா நிலையம். 16, கண்டி வீதி. கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 4077

### வைத்தியம்
சகலவைத்திய ஆலோசனை இலவசம், அரைச்சலார் ரூபா 150/- திறமான பத்தியமின்றி கட்டலாம். வலிப்பினால் சமுட்டலாம் சிவப்பூர் பக்கட்டுமிடம், A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம், மேல் மாடி, பெரிய கடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4014


(இன்று மட்டும்)
**பவானி**
மூளாய்
தினசரி 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
எஸ்.எஸ். ஆர். - தேவிகா
நடித்த
**மறக்க முடியுமா**

**சாந்தி**
(சுன்னாகம்)
வியா, வெள்ளி சனி 4-30
FALSES HAME
வயதுவந்தவர்களுக்கு
இரவு 6-15 9-30
ஞாயிறு 2-30 மெற்னி
ஜெய்சங்கர் - ராஜிஸ்ரீ
நடித்த
**புத்திசாலிகள்**


### சோதிடம்
உங்களுடைய எதிர்காலக் கல்வி, காதல், கல்யாணம், தொழில் பற்றிய செய்திகளை திகதிகளுடன் பெறுவதற்குக் காலையில் வாருங்கள். கைரேகை பார்க்க 5/- சாதகம் பார்க்க 7/50 ல. மாணிக்கம், அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 4106

நட்சத்திரம், வயது, பூமியின் பெயர், குறித்து, 15 சத முத்திரையுடன் உறையனுப்பி பலன் பெறவும், தலைசவனோ உத்தம ஆருடம், ஞானபண்டித வைத்தியசாலை, அதிபர் த. சண்முகராஜா, ஜே. பி, கொக்குவில். 4084

பட்டதாரிப் படிப்புக்கு

## 3,121 மாணவர்கள் தெரிவு

கொழும்பு, புதன்

பல்கலைப்படிப்புக்கு 3,121 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த வருடம் இலங்கைப் பல்கலைக்கழகப் படிப்புக்கு பொறியியல் பகுதிக்கு 275 மாணவர்களும் 148 பேர் பேராதனை 127 பேர் கட்டுப்பெத்த) விஞ்ஞானப்பகுதிக்கு 451 மாணவர்களும் 192 பேர் பேராதனை 172 பேர் கொழும்பு, 82 பேர் வித்தியாலங்கார மருத்துவப்பகுதிக்கு 267 மாணவர்களும் (117 பேர் பேராதனை 150 பேர் கொழும்பு) கலைப்பகுதி 2,000 மாணவர்களும் கைத்தொழில் மிருகவைத்திய பாடபகுதிக்கு 16 மாணவர்களும் சட்டக்கலைப்பகுதிக்கு 17 மாணவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம்போலவே இந்த வருடமும் எதுவித பாரபட்சமும் காட்டப்படாமல் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று மேற்படி தகவலைக் கொடுத்த டாக்டர் ஜெயரட்ண தெரிவித்தார்.

## இன்று

யாழ்ப்பாணம், வியாழன்

இன்று வியாழக்கிழமை மாலை நவாலி தெற்கு முருகமூர்த்தி கோவிலில் ஜகத்குரு ஸ்ரீசிவானந்த முனீஸ்வரர் சமய வேள்வியினால் நாட்டுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றி உரையாற்றுவார்.

## போட்டியில் முதலிடம்

உடுப்பிட்டி, புதன்

வடமராட்சி ஆசிரிய சங்கத்தில் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் மேற்பிரிவு பெண்களில் வல்லை சிதம்பராக் கல்லூரி மாணவி த பவானியும் கீழ்ப்பிரிவு ஆண்கள் பிரிவில் க செல்வா நானும் முதலிடம் பெற்றுள்ளனர்.

## WANTED

Wanted Store-keeper for Co operative Hospital, Moo'ai. Chulipuram Qualification: G C E. (full certificate) with English as a subject and five (5) years experience in store-keeping in recorised institution dealing with drugs. Age below 40 years. Salary scale: 250—400

5 x 10 & 8 x 12-50 (all inculsive). Apply in own hand-writing to the President. Colsing date 20th. March 1972. 4027

### அறிவித்தல்
சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் பெயரால் அன்னதானத்திற்கென்றும் வேறு காரணங்கள் கூறியும் சில கோவிகள் பணமும் பொருளும் பொதுமக்களிடம் சேகரிப்பது தெரியவந்துள்ளது. கோவில் தர்மகர்த்தாக்கள் சபைக் காரியதரிசியின் கையொப்பமின்றி மேற்படி கோவிலின் பெயரால் பணம், பொருள் கேட்டு வருபவர்களுக்கு எவ்வித உதவியும் அளிக்க வேண்டாமென்று அன்பர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

சுப்பிரமணியம் குமரையா
காரியதரிசி.
4025

### இடமாற்றம்
மாவிட்டபுரம், புதன்

கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயத்தில் கடமை புரிந்த ஆசிரியர்கள் மூவர் ஆம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திரு. எம். மாணிக்கம் ஒட்டறுத்தான்குளம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலைக்கும் திரு எஸ் கனகசபை மகாவித்தியாலயம் அராலி தமிழ் கலவன் பாடசாலைக்கும் செல்வி எம் சரஸ்வதி முரசுமோட்டை முருகானந்தா வித்தியாசாலைக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## இடதுகை பாவனையாளருக்கு விசேஷ கடை!

லண்டன், மார்ச் 8

உலகில் செய்யப்படும் எல்லாப் பொருட்களும் பெரும்பான்மையாக வலது கைப் பாவனையாளரை மனதிற்கொண்டே உருவாக்கப்படுகின்றன! இதனால் இடது கைப் பாவனையாளரின் பாடு பெரும் திண்டாட்டமாக இருக்கிறது. லண்டனில் இருக்கும் ஒரு கடையின் பெயர் "எல்லாம் இடது கைப் பாவனையாளருக்கு" என்பதுதான் இடதுகைப் பாவனையாளருக்கு வேண்டிய சகலவகையான பொருட்களையும் இங்கு பெறலாம்.

உலகில் சுமார் 260 கோடி இடதுகைப் பாவனை

[5-ம் பக்கம் பார்க்க]




**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஆனந்தன்
லீலா நாராயணன்
ஜெயகாந்த் தேவிகா
நடித்த
**குத்து விளக்கு**

# வங்காள தேசம் பற்றிய யு. எஸ். கொள்கையில் மாற்றம்!

## அங்கீகாரம் அளிப்பது பற்றி தீவிர ஆலோசனை

நியூயோர்க், மார்ச் 8 வங்காள தேசத்தைத் தனித்துவமான சுதந்திர அரசு என அங்கீகரிப்பது சம்பந்தமாக அமெரிக்க அரசாங்கம் மிகத் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகின்றது.

இத்தகவலை அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. வில்லியம் ரோஜர்ஸ் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க அரசின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய தனது வருடாந்த அறிக்கையில் திரு ரோஜர்ஸ் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

திரு ரோஜர்ஸின் இந்த அறிக்கையின்படி அமெரிக்க அரசு விரைவிலேயே வங்காள தேசத்தை அங்கீகரிக்கக்கூடுமென்று அவதானிகள் கருதுகின்றனர்.

வங்காள தேசம் தனியாகவே செயல்படுகின்றது என்பது இப்பொழுது தெளிவாகியுள்ளது என்று திரு. ரோஜர்ஸ் கூறியுள்ளார்.

அமெரிக்காவுடன் உறவு வைத்துக்கொள்ளப் பாரதம் கொண்டிருக்கும் விருப்பத்தையே அமெரிக்காவும் கொண்டிருப்பதாகவும், ஒரு ஜனநாயக நாட்டுடன் தொடர்புவைத்துக்கொள்ள அமெரிக்கா பெரிதும் விரும்பும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### விமானத்தில் வெடிகுண்டு

நியூயோர்க், மார்ச் 8 பிரயாணிகள் விமானமொன்றில் குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டொன்று இருக்கக் கண்டெடுக்கப்பட்டது.

கென்னடி விமான நிலையத்திலிருந்து 45 பிரயாணிகளுடன் லொஸ் ஏஞ்சல்ஸ் புறப்பட்ட டிரான்ஸ்வேல்ட் விமானம் சில நிமிடங்களில் திருப்பி வந்திறங்கிறது. விமானத்தைச் சோதித்துப் பார்த்தபோது விமானியின் அறையில் ஒரு குண்டு இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. இக்குண்டு வைக்கப்பட்டுள்ளது பற்றி பெயர் குறிப்பிடாத ஒருவர் டெலிபோனில் தகவல் கொடுத்தார்.

......

### சோவியத் உதவி

டாக்கா, மார்ச் 8 வங்காளதேசத்துக்கு சோவியத் யூனியன் 50 லட்சம் ரூபிள்களை வழங்கியிருக்கின்றது. வங்காளதேசப் பிரதமமந்திரி ஷேக் முஜிபுர் ரஹ்மானின் சோவியத் விஜயத்தைத் தொடர்ந்து இந்த உதவி அளிக்கப்படுகின்றது.

சோவியத் யூனியனிடமிருந்து உதவிகளை ஏற்றுக்கொண்டபோதிலும் மண்டலசார்பற்ற கொள்கையைத் தீவிரமாய்ப் பின்பற்றி வரும் என்று வங்கதேச வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

### வீட்டுக் கடன் செலுத்தாதவர்மீது வழக்கு

கோட்டை, புதன் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், திருக்கோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் வீடு கட்டுவதற்கு அரசிடம் இருந்து கடன் வாங்கிவிட்டு அதை இன்னும் திருப்பிச் செலுத்தாமல் இருக்கும் சுமார் 100 பேர்கள்மீது வீடமைப்பு திணைக்கள ஆணையாளர் திரு. ஐ. ஏ. சி. பெரேரா வழக்குத் தொடரவுள்ளார்.

### 50000 பேர் தாயகம் திரும்புவர்

கோட்டை, புதன் இவ்வருடம் 50,000 இந்திய வம்சாவழியினர் இலங்கையில் இருந்து தாயகம் திரும்புவார்கள் என இந்திய அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் ஒவ்வொரு வருடமும் தாயகம் திரும்புவோர் தொகையிலும் பார்க்க இது பதினைந்தாயிரம் அதிகமாகும்.

இந்திய புனர்வாழ்வு அமைச்சு இம்மக்களுக்குத் தாயகத்தில் ஆவன செய்ய தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## 7-வது கடற்படைத் தளபதி பிரதமருடன் ஆலோசனை

கோட்டை, புதன் அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய 7வது கடற்படை தளபதி ஜோன் எஸ் மக்கெயின் நேற்று முன்தினம் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவை அவரது உத்தியோக வாசஸ்தலத்தில் சந்தித்து 25 நிமிடங்கள்வரை உரையாடினார்.

கடந்தாண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற பொதுநலநாடுகளின் பிரதமர்கள் மாநாட்டில் பிரதமர் பண்டாரநாயக்கா கொண்டுவந்த "இந்துசமுத்திரப் பிரதேசம் அமைதிப் பிரதேசமாக வேண்டும் என்ற விடயமே இருவரது பேச்சுவார்த்தையின்போதும் முக்கிய அம்சமாக இருந்தது என அதிகாரபூர்வமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிநேகபூர்வமானதாக அமைந்த இந்த உரையாடலின்போது இலங்கை அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த திரு பீற்றர் ஜே. பீற்றர்சனும் உடன் இருந்தார்.

## சீன - சோவியத் உறவுகள் பற்றி

சீனாவுடன் அமெரிக்கா ஏற்படுத்திக்கொண்டிருக்கும் உறவுகள் ஒரு சமாதானத்துக்கு அமைதியை ஏற்படுத்தக்கூடியதாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். சீனாவுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள உறவுகள் உலக அமைதிக்கு மிகவும் அவசியமாகும். அதுபோல் உலக அமைதிக்கு சோவியத் யூனியனுடனான உறவுகளும் அவசியமாகும் என்று தெரிவித்துள்ளார். சோவியத்நாடு மேற்காசியாவில் அதிக நிதானத்தோடும், பொறுப்போடும் நடந்து கொள்ளவேண்டும் என்றும் அவர்.

இந்தோசீனா பற்றிக் குறிப்பிடுகையில் அங்கு உண்மையான அமைதி ஏற்படுவதையே அமெரிக்கா விரும்புகின்றது என்றார். 1972ம் ஆண்டு அமைதி ஆண்டாக விளங்கப்போகிறதா? இலங்கை என்பது வடவியட்நாமின் தீர்மானத்தில்தான் தங்கியுள்ளதென்று குறிப்பிட்டுள்ளார்.

### பாரதத் தூதருடன் ஆலோசனை

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ரோஜர்ஸ் நேற்றுப் பாரதத் தூதர் திரு. எல். கே. ஜாவுடன் ஆலோசனைகள் நடத்தினர். திரு. ரோஜர்ஸின் அழைப்பின்பேரில் திரு. ஜா அவரைச் சந்தித்துப் பேசினார். இருவரும் சுமார் 45 நிமிடங்கள் பேசினார்கள்.

வங்காள தேசத்தை அங்கீகரிக்கும்படி அமெரிக்கச் செனட்டர்கள் நால்வர் வற்புறுத்தியுள்ளனர். செனட்டர் எட்வர்ட் கென்னடி, செனட்டர் அட்லாய் ஸ்டீவன்சன் ஆகியோர் அவர்களில் இருவராவர்.

## காஷ்மீர்பற்றியகுறிப்பு தேவையற்றது

—இந்திரா

புதுடில்லி, மார்ச் 8 அமெரிக்க அதிபர் நிக்ஸனும், சீனப் பிரதம மந்திரி திரு. சூ-என் லாயும் வெளியிட்ட கூட்டறிக்கையில் காஷ்மீர் பற்றிக் குறிப்பிட்டிருப்பது தேவையற்றது என்று இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

ஜம்முவில் சில கூட்டங்களில் திருமதி இந்திரா காந்தி பேசினார். அமெரிக்காவும், சீனாவும் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள வியட்நாம் விவகாரம் பற்றி மௌனம் சாதிக்கும் அதே வேளையில் இவர்கள் காஷ்மீர் எல்லைத் தகராறு பற்றி மட்டும் ஏன் குறிப்பிட வேண்டும் என்று திருமதி காந்தி கேட்டார்.

பாகிஸ்தான் பலவீனமாக இருப்பதை நாம் விரும்பவில்லை. ஆனால் பாகிஸ்தான் எமக்கு விரோதமாகவே எப்பொழுதும் இருந்துவந்துள்ளது. சில நாடுகள் நடந்து கொள்வது விசித்திரமாக இருக்கின்றது. எமது வெற்றியை அவைகள் சிறிதும் விரும்பவில்லை. இதனாலேயே இந்தியாவுக்கு அபாயம் இன்னமும் நீங்கவில்லை என்று கருதுகிறோம் என்றார் அவர்.

## ஜென. டிக்காகான்மீது டாக்காவில் விசாரணை

டாக்கா, மார்ச் 8 பாகிஸ்தான் ராணுவத் தளபதி ஜெனரல் டிக்காகான் போர்க்கைதியாக வங்காளதேசத்தில் விசாரிக்கப்படுவார்.

ஜெனரல் டிக்காகான் முன்னர் கிழக்குப்பாகிஸ்தானில் ராணுவச் சட்ட நிர்வாகியாக இருந்தவர். இவர் வங்கதேச மக்களின் படுகொலைக்கு பலவற்றுக்கு காரணமாகவிருந்தவர் என்ற குற்றச்சாட்டின் மீது விசாரிக்கப்படுவார்

ஜெனரல் டிக்காகான் இப்பொழுது பாகிஸ்தான்ராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மீது வங்காளதேச அரசினால் நடத்தப்படும் விசாரணையின்போது பிரசன்னமாய் இருக்கமாட்டார் என்றாலும் இவர் மீதான குற்றச்சாட்டுக்களைப் புதிய அரசாங்கம் விசாரிக்கும்.

ஜெனரல் டிக்காகான் போர்க்கைதியாக விசாரிக்கப்படுவார் என்ற செய்தியை அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. அப்துஸ் சமத் அஸாத் டாக்காவில் வெளியிட்டார்.

### விமானம் கடத்தல்

நியூயோர்க், மார்ச். 8 புளோரிடாவிலிருந்து மியாமிக்குப் புறப்பட்டுச் சென்ற பிரயாணிகள் விமானம் கியூபாவுக்குத் திசை திருப்பிக் கொண்டு போகப்பட்டுள்ளது.

———

பாடசாலை வளவிலேயே

### அதிபர்களுக்கு வீடுகள்

கோட்டை, புதன் பாடசாலை அதிபர்களுக்கு பாடசாலை வளவிலேயே அரசாங்க வாடகை வீடுகள் கட்டி வழங்கப்படவிருக்கின்றன. இதற்கான கட்டடங்களை அமைப்பதற்குச் சகல மகாவித்தியாலயங்களின் விபரங்களைத் திரட்டித் தருமாறு மாவட்ட கல்வி அதிகாரிகளை கல்வி அமைச்சு கோரியுள்ளது

## மயிலிட்டி மீன்பிடி துறைமுகவேலை ஆரம்பம்

குருநகர், புதன் மயிலிட்டி மீன்பிடித்துறைமுக வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில காலமாக இத்துறைமுக வேலைகள் தடைப்பட்டிருந்ததை சுட்டிக்காட்டி இந்தத் துறைமுகத்தை அமைக்கும் வேலையை தொடர நடவடிக்கை எடுக்குமாறு காங்கேசன்துறைப் பட்டினசபையின் தீர்மானத்திற்கமைய காங்கேசன்துறை எம் பி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், பட்டினசபைத் தலைவர் திரு. வே. ஜெயவாசசிங்கமும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்கமைய இத்துறைமுக வேலைகளை மீண்டும் ஆரம்பிக்க இலங்கை பொறியியல் கூட்டுஸ்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

### விசேஷ சம்பளங்கள் இல்லை

கோட்டை, புதன் வருங்காலத்தில் அரசாங்க ஊழியருக்கோ அல்லது கூட்டுஸ்தாபன அதிபர்களுக்கோ விசேஷ சம்பளங்கள், படிகள் மற்றும் சலுகைகள் யாவும் பிரதமரின் அங்கீகாரமின்றி வழங்கப்படமாட்டாது.

அமைச்சர்கள் எடுத்துக்கொண்ட இந்த முடிவை அடுத்து இதுபற்றிய உத்தரவு ஒன்று அரசினால் சகல அமைச்சின் நிரந்தரச் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

சில அரசாங்க ஊழியர்கள், கூட்டுஸ்தாபனத் தலைவர்கள் சில சந்தர்ப்பத்தில் பெருமளவில் சம்பளம், படிகள், சலுகைகள் பெறுவதாக கண்டுபிடிக்கப்பட்டே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

———

### சரவணையில் சிறுவர் பாடசாலை

ஊர்காவற்றுறை புதன் சரவணை கிராமமுன்னேற்றச்சங்க சிவஞான மண்டபத்தில் சிறுவர் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சரவணை கிராமமுன்னேற்றச்சங்க ஆதரவில் இது நடைபெறுகிறது.

———

### வெள்ளிவிழா கொண்டுவா!

ஊர்காவற்றுறை, புதன் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. அதிபர் திரு இராசேந்திரம்பி தலைமையில் நடைபெற்ற அமைப்புக் கூட்டத்தில் பின்வரும் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர், திரு இராசேந்திரம்பி உபதலைவர்; திரு வே கோவிஸ்ரன், காரியதரிசி; திரு ... வ ஞானமூர்த்தி, தனாதிகாரி திரு ம பெனடிற்

வித்தியாலயத்தின் 25 வது ஆண்டு நிறைவையொட்டி ஆகஸ்டு மாதத்தில் வெள்ளிவிழா" வை நடத்துவது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

———

காங்கேசன்துறை

### 1-ம் வட்டார மக்கள் கமிட்டிக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன் காங்கேசன்துறை பட்டினசபையின் எல்லைக்குட்பட்ட 1 ம் வட்டார மக்கள் கமிட்டியின் முதலாவது கூட்டம் இம்மாதம் 9-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. மக்கள் கமிட்டிக்குழுத் தலைவர் திரு. ஏ குமாரகுரு தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

(குடு நி)

